27th April 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கல்லூரி நீலகிரியில் எவ்வாறு அமைக்கப்பட்டது என்பது அங்கத்தின ருக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அந்த மாவட்டக் காரர்கள் தங்கள் மாவட்டத்தில் இந்தக் கல்லூரியை துவங்க வேண்டும் என்றும், அதற்கு வேண்டிய நிதியை வசூலித்துத் தருவதாகவும் சொல்லி, வசூலிக்கவும் செய்தார்கள். நிதியை வசூலிக்கும் வரை காத்திராமல், கல்லூரியை அமைக்கவேண்டும் என்று கேட்டார்கள். இருக்கும் கட்டிடத்தில் கல்லூரி ஆரம் பிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு அவர்கள் வசூலிப்பதை நிறுத்தி விட்டார்கள். அது பூராவும் இப்பொழுது சர்க்காரின் பொறுப்பாக இருக்கிறது, இப்பொழுது வேண்டிய கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

Water-supply scheme (Coimbatore)

* 17 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the steps taken for obtaining the concurrence of the Kerala Government for expanding the Coimbatore Water-supply Scheme from the Siruvani river; and

(*b*) the present stage of the negotiations with Kerala?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) The matter is under correspondence with the Government of Kerala.

SRI M. KALYANASUNDARAM : ஸார், கோயம்புத்தூர் நகரத்திற்கு குடிதண்ணீர் வேண்டுமென்ற பிரச்னை 5, 6 வருஷ காலமாக அரசாங்கத்தின்முன் இருந்துவருகிறது. அதற்கு எப்பொழுதுதான் ஒரு முடிவு காண முடியும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : கடைசி யாக 1961-ம் ஆண்டு ஜுன் மாதம் 17-ம் தேதி நம் மாநில முதல் அமைச்சர், கேரள முதல் அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக் கிறார்கள். கூடிய சீக்கிரம் இதற்கு முடிவு காணமுடியும் என்று நினைக்கிறேன்.

Forest in the Nilgiris (afforestation)

* 18 *Q*.—SRI J. MATHA GOWDER : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி யில் காட்டு இலாகாவினர் எத்தனை ஏக்கர் புது காடு வளர்த்தனர்?

(இ) சென்ற பத்து ஆண்டுகளில் சர்க்கார் எத்தனை எக்கர் பழைய காடுகளை அழித்தனர்?

(உ) அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) A total area of 19,330 acres has been afforested in the Nilgiris district from 1954–55 under the First and the Second Five-Year Plans.

(*b*) It is presumed that the member wants information about forest lands disreserved and diverted for other purposes. An extent of about 799 acres of forest areas has been allotted for purposes other than forestry in the Nilgiris district from 1953 to 1961.

(*c*) The allotment of forest lands was made for purposes like implementing the Moyar Scheme, setting up a Fruit Nursery by the Agriculture Department, assignment to the members of the Thengumarakada Co-operative Farming Society, etc.

SRI J. MATHA GOWDER : ஸார், பழைய காடுகளை விட்டு விட்டு, பக்கத்தில் கிராமம் இருக்கக்கூடிய பூமிகளில் காடு வளர்க்க காட்டிலாகாவினர் முயற்சி செய்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, கிராம மக்களுக்குத் தொந்தரவு, இடைஞ்சல் இல்லாதவகையில், காடுவளர்ச்சி செய்ய நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : அந்த மாதிரி செய்துகொடுக்க அரசாங்கம் முன்வரும்.

SRI T. KARCHA GOWDER : காடுகள் வளர்ப்பு தீவிரமாக நடப்பதன் காரணமாக, மேய்ச்சல் நிலங்கள் குறைந்து, கால் நடைச்செல்வம் நீலகிரி மாவட்டத்தில் அழிந்து வருகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : அவசியமான காரியங்களுக்குக் கொடுக்கத் தான் வேண்டியிருக்கிறது.

Municipal elections

* 19 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) the programme for the municipal elections.

(*b*) whether there is any proposal to re-distribute the wards; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) The programme has not yet been drawn up.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

SRI M. KALYANASUNDARAM : பல நகராட்சி மன்றங்களின் காலம் இந்த வருஷத்தோடு முடிவடைகிறது. அதற்குள் தேர்தல் நடத்தப்படுமா அல்லது அதன் பதவிகாலம் நீடிக்கப் படுமா ?

THE HON. SRI S. M. A. MAJID : நீடிக்கப்படாது. குறிப்பிட்ட காலத்தில் தேர்தல் நடத்தும் பிரச்னை பரிசீலனையில் இருக்கிறது.